அந்த மாவட்டத்திற்கு வரக்கூடிய நல்வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. அந்த மாவட்டம் இன்றைக்கு பாதுகாப்பு வழித்தடத்திலும் ஒரு முனையமாக உருவாகிக்கொண்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல், அந்த இடத்தில் சர்க்கரைத் தொழிற்சாலையோ, scent தொழிற்சாலையோ அல்லது மரவள்ளிக்கிழங்கு தொழிற்சாலையோ வரவேண்டுமானால், அந்த தொழிற்சாலைகளை அங்கு அமைப்பதற்கு ஏதேனும் தொழில் நிறுவனங்கள் முன்வந்தால், தொழில் துறை அதற்கான அனைத்து வாய்ப்புகளையும், வசதிகளையும் அவர்களுக்கு உருவாக்கித் தந்து, அந்தத் தொழில்களை அவர்கள் அங்கு துவங்குவதற்கான ஊக்குவிப்பினை நிச்சயமாக வழங்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த ஆண்டும் திருவள்ளூர் மாவட்டத்தில் ஒரு புதிய தொழிற்பூங்காவினை அமைப்பதற்கான ஓர் அறிவிப்பினை நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது மாவட்ட தொழில் வளர்ச்சிக்கு நிச்சயமாக அரசு அனைத்து வகைகளிலும் உதவியாக இருக்கும்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

158—

மயானக் கொட்டகை

***2761—திரு. R. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் தொகுதி, கீழக்குறிச்சி கிராமத்தில் மயானக் கொட்டகை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கடலூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சி ஒன்றியம், கீழக்குறிச்சி கிராமத்தில் மயானக் கொட்டகை 2021–2022 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ்

2022 ஏப்ரல் 22]

புதியதாக ரூ.19.43 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் ஆக்கிரமிப்புகள் அதிகமாக உள்ளன. அவற்றை அகற்றி, சுற்றுச் சுவரும், சாலை வசதியும் ஏற்படுத்தித் தருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல ரூ.19.43 இலட்சம் மதிப்பீட்டில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வதைப்போல, அங்கு ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. ஆகவே, முறையாக அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுகின்ற பணி நடைபெற்று வருகிறது. முடிந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அந்தக் கிராமத்திற்குச் சென்று, கிராம மக்களிடம் பேசி, ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணிகளை விரைந்து முடித்துக் கொடுப்பார்களேயானால், அங்கே மயானக் கொட்டகை அமைப்பதில் எந்தவிதத் தடையும் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள முகாசபரூர் கிராமத்தைச் சுற்றி 18 கிராமங்கள் உள்ளன. அந்தக் கிராம மக்கள் சுப நிகழ்ச்சிகள் செய்வதற்கு 16 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள விருத்தாசலம் நகரத்திற்கு வரவேண்டியுள்ளது. ஆகவே, அங்கு ஒரு சமுதாயக் கூடம் அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு*

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். கேட்டது மயானக் கொட்டகை. அதோடு, சமுதாய நலக் கூடமும் கேட்கிறார்கள். செய்து கொடுங்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய 12,525 ஊராட்சிகளிலும், அதனோடு தொடர்பில் இருக்கக்கூடிய துணை கிராமங்களிலும் இதுபோன்ற சமுதாயக் கூடங்களை அமைக்க வேண்டுமென்ற தேவை மாண்புமிகு உறுப்பினர்களால் எழுப்பப்பட்டு வருகிறது. ஆகவே, இந்தத் தேவையினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையின்படி அவருடைய அறிவுரையைக் கேட்டு, இதற்கான திட்டத்தை நாங்கள் நிறைவேற்றித் தருவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி தொகுதியையும், நெய்வேலி தொகுதியையும் சேர்த்து, இரண்டு தொகுதிகளுக்குமான ஒரே ஊராட்சி ஒன்றிய அலுவலகம் இயங்கி வருகிறது. ஊராட்சி ஒன்றிய Council கூட்டமும் அங்கேதான் நடைபெற வேண்டும். அலுவலர்களுக்கான அறைகளும் அங்குதான் இருக்க வேண்டும். போதுமான கட்டட வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒப்புதல் வாங்கியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி மயானக் கொட்டகை வேண்டும் என்பதுதான். அவர் கேள்வி கேட்டதினால்

2022 ஏப்ரல் 22]
அதை அனுமதித்தேன். இது மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லை. உட்காருங்கள்.

வினா வரிசை எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.M. *தமிழ்செல்வம், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

159—

கால்நடை மருத்துவமனை

***12009—திரு. T.M. தமிழ்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை வட்டம், பாவக்கல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எழுதிக் கொடுத்துவிடுங்கள். செய்து தந்துவிடுவார்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை வட்டம், பாவக்கல் ஊராட்சி, பாவக்கல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* T.M. *தமிழ்செல்வம் அவர்கள்.*

திரு. T.M. தமிழ்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு அம்மா அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு முன்னாள் முதல்வர், எதிர்க்கட்சித்*